
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம.




காளி கோவிலடி வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த

அமரர்

# தம்பு கந்தையா

அவர்களின்

# அஞ்சலி மலர்

08.09.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# திரு. தம்பு கந்தையா

அவர்கள் அமரத்துவம் எய்தியமை குறித்து வெளியிடப்படும்

# அஞ்சலி மலர்

**08.09.2004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்புக்கு அணிகலனாய்,

பாசத்தின் பிறப்பிடமாய்,

பொறுமையின் பொக்கிஷமாய்

அறிவின் சிகரமாய்

எமது இதயத்தில் என்றும் அணையாத்

தீபமாய் சுடர்வீசும், மறைந்தும்

மறையாத எம் அன்புத் தெய்வத்தின்

பாதக் கமலங்களுக்கு இந்நினைவு மலர்

காணிக்கையாகட்டும்.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம.



தோற்றம்
15.02.1937

மறைவு
17.08.2004

# அமரர் தம்பு கந்தையா

அவர்களின்

## திதி வெண்பா

**தேடும் தாரண தேர் வருட**
**ஆவணித் திங்கள் பதினேழில்**
**பூர்வயக்க துதியைத் திதிதனில்**
**மாண்புறவே வாழ்ந்திட்ட**
**தங்கமகன் கந்தையா தானிவன்**
**விண்ணுலகம் ஏகிவிட்ட நாளிதுவே......**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச புராணம்

## விநாயகர் துதி



ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனதடி தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடரினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமா
றீவதொன் றெமக் கில்லையே
அதுவோ வுன தின்னருள்
ஆவடுதுறை யரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கண்களிரண்டு மவன்கள் கண்டு களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம்வாழ்விலென் வாழ்வு கடைப்படுமாகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே
மாலறியாமலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொடாடல் பயின்றிடு மாகாதே
பாண்டி நன்னாடுடை யான்படை யாட்சிகள் பாடுதுமாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனை
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டு கண்டு உள்ளம்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலாவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில்சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

தந்தத் தன தத்தத் தனதன தனதான
முத்தைத் தருபத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர - எனவோது
முக்கட் பரமற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்து முவர்க்கத் தமரரும் அடியேனைப்
பத்துத் தலை தந்தக் கணைதொடு
ஒற்றைக் கிரிமத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியில் இரவாகப்
பத்தற் கிரதத்தைத் கடவிய
பச்சைப் புயல் மெச்சத்தகு பொருள்
பட்சத் தொரு ரட்சித் தருள்வதும் வருநாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரசி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பசி கட்டப் பயிரவம்
தொக்குத் தொரு தொக்குத் தொரு தொரு
சித்ரபவுரிக்குத் தரிகட - எனவோற்க
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகுகுகு
குத்திப் புதை புக்குப் பிடியென முதுகடகை
கொட்புற்றெழ நற்பற்றவுணமை
வெட்டிப் பலியிட்டுக் குலகிரி
குத்துப் படவொத்துப் பொருளை பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்..

திருச்சிற்றம்பலம்

## அமரர் திரு.தம்பு கந்தையா அவர்களின் வாழ்க்கைப் பாதையிலே......

இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும் ஈழவள நாட்டின் இதயம் எனத் திகழும் வவுனியா மாவட்டத்தில் நீர் வளமும், நில வளமும் ஒன்றாக அமையப் பெற்ற கிடாச்சூரி என்னும் பகுதியில் வானவருக்கும் வானகம் அமைந்த விஸ்வப் பிரம்ம உயர் வம்சத்திலே இனிதே இல்லறம் புரிந்து வானில் உறையும் சின்னக்குட்டி தம்பு, சீதாம்பாள் தம்பதிகளின் இல்லறப் பயனாக 1937ஆம் ஆண்டு மாசி மாதம் பதினைந்தாம் நாள் அன்னை மடியில் அமரர் தம்பு கந்தையா பிறந்தார்.

அவரது ஏழாம் வயதிலே குதிரைகளின் குழம்பொலியும், வண்டில் சக்கரச் சுழற்சியின் கண்கொள்ளாக் காட்சியைக் கொண்டதும், சிறந்த அரசியல் அறிஞர்களையும், கலைஞர்களையும், தொழில் வல்லுனர்களையும் கொண்டதும், சிறந்த சிற்ப ஆசாரியார்களைத் தன்னகத்தே கொண்டதுமான நிலவளம் பொருந்திய வட்டுக்கோட்டைக்கு வந்து சின்னக்குட்டி முருகேசுவுடனும், அவரது மகன் கணபதிப்பிள்ளையுடனும் வாழ்ந்து வந்தார். இந்நாளில் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பயின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசுவுடனும், அண்ணர் கணபதிப்பிள்ளையுடனும் ஆசாரித் தொழிநுட்பங்களில் பயிற்சி பெற்று சிறந்து விளங்கினார். இவரது நேர்மை, அன்பு, பாசம், நற்பண்பு, சீரிய வாழ்க்கை முறை என்பவற்றால் எல்லோராலும் மிகவும் பாராட்டப்பட்டார். அக்காலப் பகுதியில் சகல வளங்களும் நிறையப் பெற்ற தாவடியூரில் சிறப்புடனும், பெருமையுடனும் வாழ்ந்து வந்த கந்தையா மனைவி இரத்தினம்மா தம்பதிகளின் புத்திரியாகத் திகழ்ந்த அன்பும், அறிவும், அழகும் திகழ்ந்த கமலாதேவி அவர்களை 1965ஆம் ஆண்டு திருமணப் பந்தத்தில் தனது துணைவியாக்கிக் கொண்டார்.

**''அன்பும் அறனும் உடைத்தாயின்**
**இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது''**

என்று வள்ளுவரின் வாக்கிற்கு அமைய இல்லறம் என்ற நல்லறத்தை இனிதே நடாத்தி வந்தார். இதன் பயனாக காளி அம்பாளின் அருளினால் ஏழு குழந்தைகளுக்குத் தந்தையானார். பெற்றெடுத்த தலைமகனாக கருணாகரனையும் தொடர்ந்து காந்தன், சறோஜினி, சிவகுமார், கவிதாஸ், தயாளினி (அமரர்), சுகந்தினி ஆகியோரை அன்புடனே சிறந்த தந்தையாக தன் செல்வங்களைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து சிறந்த கல்வியூட்டி சமூகம் போற்றும் உத்தமச் செல்வங்களாக உருவாக்கிக் கொண்டார். இவர்களின் இல்லறத் துணைகளாக கருணாகரனுக்கு றமிளாவையும் (மதி), காந்தனுக்கு சறோஜினியையும், சறோஜினிக்கு சிறிதரனையும், சிவ குமாருக்கு ஜெயந்தியையும், கவிதாசிற்கு அஜந்தாவையும், சுகந்திக்கு ரமணதாஸையும் இல்லற வாழ்வில் இணைத்து வைத்தார்.

இவ்வாறு மகிழ்வுற்ற காலத்தில் மேலும் மகிழ்வூட்ட பேரக்குழந்தைகளாக சகானா, றொசாந்தனன், கெவின்ராஜ், ஐதுர்ஸ்வதன், தர்ஷனா, சாய்தாஸ், கஜானா, கஜவதனன், கனிஷ், ஜனோசியன், அபிநயா ஆகியோர் பிறந்து மகிழ்வூட்டினர். பேரக்குழந்தைகளின் பாசமிகு தாத்தாவாக அன்பைச் செலுத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரோடும், புகழோடும் சிறப்புற்று வாழ்ந்து வரும் காலத்தில் சுவிஸ் நாட்டில் வசிக்கும் தமது பிள்ளைகளிடம் சென்றுவரச் சென்றார். அங்கிருந்து தனது கடைசிச் செல்ல மகளின் குழந்தை அபிநயாவைப் பார்க்க ஆவலுடனே இலண்டன் சென்று சுவிஸ் திரும்பினார். மீண்டும் இலங்கை திரும்புவதற்காக ஆயத்தங்களைச் செய்தார். இவ்வேளையில் காலனின் குறி அன்னார் மீது விழுந்தது. இருதய நோய்க்கு உட்பட்ட இவர் சுவிஸ் நாட்டின் சிறந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அந்நாட்டின் தலைசிறந்த வைத்திய நிபுணர்களின் நேரடியான சிகிச்சை பெற்றார். இருந்தும் காலனின் பிடியில் இருந்து அவரை மீட்க முடியவில்லை. உயிர் பிரியும் வேளையில் மகன் கருணாகரன், காந்தன், சிவகுமார் ஆகியோர் அவர் காலடியில் நின்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர். இவர்களுடன் ரகுராஜ், முகுந்தாஸ் ஆகியோர் ஏக்கத்துடனும், கலக்கத்துடனும் நின்றார்கள். இவ்வேளை சுவிஸ் நேரம் காலை 05.55 அளவில் காலன் அவரின் கணக்கு முடிந்தது என தன்னிடம் எடுத்துக் கொண்டார்.

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”**

என்ற வாக்கிற்கு அமைய இறை நிழலடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையாள் மனதில் ....

மங்கலத் தாலி கட்டி - எனை
மகிழ்வுடனே வாழ வைத்தாய் ..........
பூவுடனே பொட்டுமிட்டு - எனை
பூமகளாய் வாழ வைத்தாய்

இணைந்து வந்த பாதைதனை
இடைவழியில் ஏன் பிரித்தாய்
நீயென்னைப் பிரிந்ததனால்
நெஞ்சமது வேகுதையா ..........

உனை மீண்டும் காண்பதற்கே ........
உள்ளமது தவிக்குதையா
உன்னடிக்கே நான் வந்து
உறங்கிடவே தோன்றுதையா ........

## பிள்ளைகளின் துடி துடிப்பு

அலை கடல் ஓய்ததப்பா .....
ஆழ் கடல் காய்ந்ததப்பா .....
கவலையெனும் பெரும்புயல் வந்ததப்பா .....
கண்களெல்லாம் குளமாகிப் போனதப்பா .....

பறவையாய்ப் பறந்ததுநீ பக்குவமாய் இரைதேடி
பாசமாய் எமக்களித்து பக்குவமாய் வளர்த்து வந்தீர்
தீக்கு நீர் இரையாக தாங்கிடுமோ எம் நெஞ்சம்
தவிக்கின்றோம் நாமிங்கே துடுப்பிழந்து ஓடங்களாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்களின் மனத் தவிப்பு

உடலென்று இவ்வுலகில் பிறப்பானோம்
உம்தெரிவால் நாமிங்கு உயிரானோம்
உள்ளத்தில் உவகைதனை நீர்தந்தீர்
ஊர் போற்ற எமை இங்கே வாழவைத்தீர்

காலனவன் ஏனின்று உமைக் கவர்ந்தான்
கண்ணீரில் ஏமைஎன் மூழ்க வைத்தான்
கண்மடலாய் உமைக்காக்க காத்திருந்தோம் - இன்று
கண்ணீர்ப் பூக்களையே காலடியில் சேர்க்கின்றோம்.

## பேரப்பிள்ளைகள் தவிப்பு

தாத்தா என்றுநாம் தவழ்ந்து வரத் தூக்கிடுவீர்
ஓடித்தேடி வர ஒழிந்து நீர் மகிழ்விப்பீர்
கேட்டதெல்லாம் வாங்கி வந்து
குதூகலத்தில் ஆழ்த்திடுவீர்
குறும்புகள் செய்தாலும்
குற்றமது பொறுத்திடுவீர்...........
காற்றுடனே இன்றுநீர் கலந்திட்டீர்
கண்களையே குளமாக மாற்றிவிட்டீர்

இதயமது உள்ளவரை
உங்கள் நினைவிருக்கும் .......
எமைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் புகழ் நிலைத்திருக்கும் .......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார், உறவினர், சுற்றத்தார் புலம்பல்

மனிதரில் மாணிக்கமாய்
மண்ணுலகில் வாழ்ந்திடுவீர்

அன்பாய் எமையெல்லாம்
ஆதரித்தீர் இவ்வுலகில் .......

பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்

பழகியே இருந்துவிட்டு
பிரிந்து நீர் எங்கு சென்றீர் ......

உதவிக் கரம் நீட்ட
ஓடியே முன் வருவீர்

காலன் கரம் நீட்ட
காவியமாய் ஆகிவிட்டீர்

ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம் ........

## பேத்தி சகனாவின் புலம்பல்

தாத்தா! தாத்தா! என்று நான் ஓடிவர
தாயைவிடப் பாதுகாத்தீர் .............
தொலை பேசி எமக்கெடுத்து
தினமும் தொடர்பு கொள்வீர் ..........
இனிப்புப் பண்டங்களை எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமுடன் வாங்கித் தருவீரே
ஒரு குறையும் வைக்காமல் - எமக்கு
எல்லாமும் வாங்கித் தருவீரே ........
எமைவிட்டுப் பிரிந்தது தான்
நீர் செய்த ஒரு குறை தான் .......

## என்று தனியுமோ இத்துயரம்
## தமையன் கணபதிப்பிள்ளை புலம்பல்

கண்ணை இமை காப்பது போல் காத்துன்னை
காலனிடமா கைவிட்டேன் உனையின்று

சரத்தைப் பிரிந்து மீனாய்
சோடியிழந்த அன்றிலாய்
காடுதன்னில் இமைப்பிரிந்த மானாய்
கடுந்துயரில் நான் கலங்க
காலன் உன்னைக் கவர்ந்தானோ

உனக்கு வேண்டிய தெல்லாம் செய்தேன்
எனைப் பார்ப்பாய் என்றிருந்தேன்
என்னை விட்டுப் போய்விட்டாயே
இனி நான் தரையில் நடைப்பிணமென
திரிவேனோ? அண்ணா அண்ணா என்று இணை
பிரியாமல் திரிவாயே இனி எப்பிறப்பில்
உனைக் காண்பேன்.

*உனது பிரிவால் துயருறும்*
*அண்ணன் மு.கணபதிப்பிள்ளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பார்வையில் ...

## அமரர் தம்பு கந்தையா

அன்பு மொழி, அன்பு முகம், அன்பு செய்கை, அன்புக் கொடை, அன்பு மலர்ந்த வாழ்க்கை, இன்பமிகு பண்பாகக் கொண்ட மேலோன் என் உள்ளத்தில் அகலாத தெய்வ நண்பன். மனம் சிறந்த தம்பு கந்தையா என்னும் குணசீலன் மறைந்த செய்தி என்னை மிக மனம் நெகிழ வைத்ததே! அவர் எல்லோருடனும் அன்பாகவும், அமைதியாகவும் பேசுவார். ஒருவருடனும் முரண்படமாட்டார். தன் மனதிற்குச் சரி எனப்பட்டதை ஆணித்தரமாகக் கூறுவார். இப்படியான நற்பண்புகள் கொண்ட எனது நண்பன் அமரர் த.கந்தையா அவர்கள் இன்று நம் மத்தியில் இல்லாதது நமது துர்அதிஷ்டமே. அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த ஆனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

கங்கைபுனை சடையோனே காலமெலாம்
பொற்பொதுவில் நடமிடுவாய்
துங்கமலி கந்தைய வேளார் தாமும்
துரிசொன்றும் இல்லாதார்
பொங்கரவம் புனைவோனே
செங்கமலப் பாதநிழல் இடந்தந்தே
அருள் புரிவாய் போற்றுகின்றோம்.

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**க.பாலச்சந்திரன்**
**(ஓய்வு பெற்ற வங்கி நிறைவேற்று அதிகாரி) மூளாய் வீதி,**
**வட்டுக்கோட்டை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தடிகள் புலம்பல்

(தன் தாயாருக்கு தகனக் கிரியை செய்கையில் அருளியது. எனினும் மரணத்தின் துயரைத் தொடுவதாதலின் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.)

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று
பையலென்றபோதே பிரித்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திப் பகலாய்ச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்?

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள் மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்?

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்தி முலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்
தனக்கோ மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நான் இடுவேன், ஆத்தாள் தனக்கு?
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு?

அள்ளி இடுவது அரிசியோ? தாய் தலை மேல்
கொள்ளி தனை வைப்பேனோ கூசாமல்? மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி "என்றன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனே” என அழைத்த வாய்க்கு?
முன்னை இட்டதீ முப்பபுரத்திலே,
பின்னை இட்டதீ தென் இலங்கையில்,
அன்னை இட்டதீ அடி வயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயிதனில், வெந்துபொடி சாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ! மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்?

வீற்றிருந்தாள் அன்னை, வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள், இன்றுவெந்து நீறானாள், பால் தெளிக்க,
எல்லீரும் வாருங்கள்! ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

## உணவே மருந்து

(மறைந்து வரும் கைமருந்துகள் சில)

எதிர்ப்புச் சத்துக் குறைவுக்கு வேப்பங் கொழுந்து துவையல், காசநோய்க்கு தூதுவளங்காய் வறுவல், தோல் சுருக்கத்திற்கு வெந்தய இட்லி, தாய்ப்பால் சுரக்க முட்டைக்கோஸ் சூப், கருப்பைப் புற்றுநோய்க்கு பப்பாசிக்காய்க் கறி, மார்புப் புற்றுநோய்க்கு வல்லாரைத் துவையல், வெள்ளைப் போக்கிற்கு நீற்றுப்பூசணிச் சம்பல், முகப்பருவிற்கு பப்பாசிப் பாயாசம், உழுந்து ஏப்பம் போக்க ஓமம், உடல் வலுக்க எள்ளு, ஊளைச் சதை குறைக்க கொள்ளு, இளமை காக்க இஞ்சி , இளந்த சக்தி பெற பார்லிக் கஞ்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுக்கு:-**

(வேர்க்கொம்பு), கருப்பட்டியுடன் சேர்த்து குடிநீராக்கிக் குடிக்க, உடல் தளர்ச்சி நீங்கி பசி எடுக்கும். சுக்கைச் சுட்டு பனங்கட்டி காற்பங்குடன் சேர்த்து அரைத்த குழம்பை பதமாக எடுத்து காலை, மாலை கொட்டைப்பாக்களவு சாப்பி வயிற்றுப் பொருமல் ஏப்பம் தீரும்.

சுக்குடன் சிறிது உப்புச் சேர்த்து அரைத்துச் சாப்பிட வாயு ஓங்காளம் இரைச்சல் தீரும்.

**இஞ்சி:-**

இஞ்சியை இடித்துச் சாறு பிளிந்து உறைய வைத்த பின் சாற்றைத் தேனுடன் கலந்து குடிக்க காலையில் எழும் தலைச்சுற்று, வாந்தி குணமாகி பித்தம் நீங்கும். இஞ்சியுடன் வெள்ளைப் பூண்டை அரைத்து விழுங்க வயிற்றுவலி குணமாகும்.

**கீரை வகை:-**

தூதுவளையை நெய்யுடன் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டுவர புத்திக் கூர்மை, விந்து வெளியேறுவது நின்று உடல் உறுதி அடையும்.

முருங்கைக் கீரையுடன் கச்சானும் சேர்த்துச் சமையல் செய்து சாப்பிட்டு வர வாதநீர் பறந்தோடும்.

வல்லாரை ஐந்து இலைகளுடன் மிளகு மூன்று சேர்த்துக் காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர மூலம் குணமாகும். குப்பைக் கீரையை பருப்புடன் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட உடல் அழலை போகும்.

அகத்திக் கீரையைச் சாப்பிட வயிற்றுச் சூடு, வயிற்றுப்புண், வாய்ப்புண் குணமாகி தெளிவு பெறும். மலம் இளகும். நூறு கிராம் எள்ளுப் புண்ணாக்குடன் முருங்கை இலைகளை உலர்த்திப் பொடி செய்து தினமும் மூன்று வேளை சாப்பிட்டு வர நீரிழிவு நோய் குணமாகும்.

கீரைகளை உணவில் சேர்ப்பதால் உடல்வலுப் பெறும். மூளை, முடி, கண், காது, மூக்கு, பற்கள், நாக்கு, உதடு, தொண்டை, இதயம், நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம், சிறுகுடல் என்பன உரம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில் ......

வட்டு மண் பிறந்து வாழ்வில் உயர்வு பெற்று
வறுமையில் வாடி நின்றோர்க்கெல்லாம்
வாரிக் கொடுத்து வான் போற்றும்
வள்ளலாய் வாழ்ந்த செம்மல்
வாய் பொத்தி ஊர் அழ, உறவுகளும் தானழ
வானளாவச் சென்று மறைந்தாய் எனும் சேதி
வானிடியாய் வீழ்ந்ததையா வையமெலாம் காண்!

எம்மோடு சில நாட்கள் செவ்வாடை உடுத்தி நீங்கள் ஆதிபராசக்தி இயக்கத்தில் தொழுதும், தொண்டுகள் புரியும் உம் குழவிகள் கண்டு உள்ளமது பூரித்து நின்றவை எம் நினைவைவிட்டு நீங்கு முன் நினைவு பிரிவு ஆனதே.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்
கொள்வதோடு அவரின் ஆத்மா ஆதிபராசக்தியவள்
திருவடியில் ஆத்மா சாந்தி பெற சுவிஸ்லாந்து
செவ்வாடை சக்திகள் அன்னையின் திருவடியை
இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓம் சக்தி!

மேல் மருத்துவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்
சுவிஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்

தோற்றம்
15 - 02 - 1937



மறைவு
17 - 08 - 2004

அமரர்

## திரு. தம்பு கந்தையா அவர்கள்

எமது நண்பரின் தந்தையாரின் மறைவையிட்டு
துயர் உற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது
குல தெய்வமாகிய அற்புத காளிகா
அம்பாளின் திருவடிக்
கமலங்களை வேண்டி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

அன்னாரின் பிரிவால் துயருறும்
வட்டுக்கோட்டை தெற்கு நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
15
-
02
-
1937



மறைவு
17
-
08
-
2004

அமரர்

## திரு. தம்பு கந்தையா அவர்கள்

*அன்பின் ஒளிவிளக்கே! பண்பின் சிகரமே!*
*பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்*
*நேசமுடன் எம்முடன் பழகி எல்லோருடனும் அன்பு மழை பொழிந்து எல்லா நாளும் எம்முடன் சிரித்துப் பழகிய நீர் சொல்லாமல் பேசாமல் சென்றீரே உம் குடும்பத்தின் துடிப்போடு நாமும் நொந்து நெருட துடிக்கின்றோம்.*

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

தியாகராசா குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 – 02 – 1937 |  | 17 – 08 – 2004 |

வட்டுக்கோட்டை காளி கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

## திரு. தம்பு கந்தையா அவர்கள்

பழகிய நாட்களில்
விலகியிருக்க நினைத்ததில்லை
உன்னைப் பார்த்திருந்து பசி மறந்தோம்
மனித உணர்ச்சியிலே கோபத்தைக் கண்டதில்லை
இப்போ உனது முகம் காணாது
தவிர்த்து விம்புகின்றோம்
பாவத்தையறியாத உனக்கு ஆண்டவன்
சந்நிதியில் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சங்கானை
23.08.2003

அம்பாள் மரக்காலை
உரிமையாளர்—பாபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

தோற்றம்
15
02
1937



மறைவு
17
08
2004

வட்டுக்கோட்டை காளி கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

## திரு. தம்பு கந்தையா அவர்கள்

அன்புத் தெய்வமாய்
ஆதரவு காட்டும் தெய்வமே!
ஈன்றெடுத்த அன்னை போல்
அன்பாலே எம்மையெல்லாம் மகிழச் செய்தீர்
நீண்ட காலமாக உமது தொழில்களை புகழ்பெறச் செய்தீர்களே
நண்பர், உறவினர் எவருக்கும் உதவுகின்ற நல்லுள்ளம் கொண்டிருந்தீர்
எவரிடத்தும் பண்பாக நடந்திடுவீர்!
நல்லுள்ளத்தால் அன்பாக பழகிடுவீர்!

அன்னார் அவர்களின் இழப்பு அவர் குடும்பத்திற்கு மட்டுமல்ல, வட்டுக்கோட்டை வாழ் மக்களுக்கும் பெரிய இழப்பாகும். இந்த இழப்பை ஈடு செய்ய துயருற்றிருக்கும் வெளிநாட்டு, உள்ளூர் மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

**மர அரிவு ஊழியர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி சொரியும் அருவிகள்

மலர்வு
15
–
02
–
1937



உதிர்வு
17
–
08
–
2004

அமரர்

# தம்பு கந்தையா (ஆசாரியார்)

(மரஅரிவு ஆலை உரிமையாளர்)

நிலை பெறாதுலகில் தரியாதேகினாய்
உறவும், சுற்றமும் கலங்க இங்கு
அலையும் உயிர்விடுத்துப் போனாயோ
கலங்கிடும் உறவுகளோடெம்
துயர் அதைப் பகிர்ந்தோம் உயர
கந்தையா சாந்தி பெற்றுய்க!
அயர்விலா வானுலகில் உன் ஆன்மா
சாந்தி பெறப் பணிந்தோம்.

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

முருகேசு நடராஜா
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றைவேந்தன்

**1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**

தாயும் தகப்பனும் முன்னே காணப்பட்ட தெய்வங்கள்

**2. ஆலயந் தொழுவது சாலவு நன்று**

கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது மிகவும் நல்லது

**3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று**

வீட்டில் மனைவியோடு வாழ்ந்து செய்யும் அறமே நல்லறமாகும். துறவறம் எளிதிற் செய்யக் கூடியது அல்ல.

**4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்**

ஏழைகளுக்குக் கொடாமல் உலோபிகள் சம்பாதித்த பொருளைத் தீயோர் களவெடுத்துப் போவார்கள்.

**5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு**

உணவு சுருங்குதல் பெண்களுக்கு அழகாகும்.

**6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்**

ஒருவன் தன் ஊராருடன் பகைத்துக் கொண்டால் அடியோடு அழிந்து போவான்.

**7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.**

கணிதமும் இலக்கணமும் மனிதனுக்கு இரண்டு கண்கள் எனப்படும்.

**8. ஏவா மக்கள் மூவா மருந்து**

பெற்றோர் சொல்வதன் முன் குறிப்பறிந்து செய்யும் பிள்ளைகள் தேவாமிர்தம் போன்றவராவார்.

**9. ஐயம் புகினுஞ் செய்வன செய்**

பிச்சையெடுத்தாலும் செய்யத் தகுந்த காரியங்களைச் செய்.

**10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு**

தக்கவன் ஒருவனைத் துணையாகப் பற்றிக் கொண்டு ஓரிடத்தில் வாசஞ் செய்.

**11. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்**

பிராமணருக்கு ஆசாரமானது வேதம் ஓதுவதிலும் சிறந்ததாகும்.

**12. ஓளவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு**

ஒருவன் பொறாமை வார்த்தைகளைப் பேசுவது அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்துப்பால் இல்லறவியல்

01. "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல் ஆற்றின் நின்ற துணை"

02. "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

03. "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஏக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை"

04."பழி அஞ்சி பார்த்து ஊண் உடைத்தாயின்
வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

05. "அன்பும் அறனும் உடைத்தாயில் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

06. "அறத்து ஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்து ஆற்றின்
போஒய்ப் பெறுவது எவன்"

07. "இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்வான் என்பான்
முயல்வருளட எல்லாம் தலை"

08. "ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து"

09. "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று"

10. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் ஒளி விளக்கான தந்தையாரின்
துயரச் செய்தி கேட்டு நேரில் வந்து துயரில்
பங்கு கொண்ட அனைவருக்கும்,
வெளிநாட்டிலிருந்து தொலைத்தொடர்பு
மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த
அனைவருக்கும்,டி மேலும் பல வழிகளிலும்
உதவி புரிந்த அனைவருக்கும்
இன்று 08.09.2004 இடம் பெறும் வைபவத்திலும்
கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும்
எங்கள் இதயம் கனிந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
அன்புடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

காளி கோவிலடி,
வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் கொடியில் மலர்ந்த பூக்கள்

தம்பு + சீதாம்பாள்
↓
கந்தையா

கருணாகரன் + றமீளா (மதி) ↓ தர்ஷனா, கஜானா, கஜவதனன் (சுவிஸ்)

காந்தன் + சறோஜினி ↓ றொசாந்தனன், கெவின்ராஜ் (சுவிஸ்)

சறோஜினி + சிறிதரன் ↓ சகானா, ஜதுர்ஸ்வதன், சாயிதாஸ் (திருகோணமலை)

சிவகுமார் + ஜெயந்தி ↓ கனிஸ் (சுவிஸ்)

கந்தையா + ரத்தினம்மா
↓
பூபாலசிங்கம் (அமரர்)
சுந்தரராஜா (அமரர்)
மங்கையற்கரசி
மாசிலாமணி
கமலாதேவி
சோதியம்மா
நவரத்தினம்
சண்முகராசா (அமரர்)

கவிதாஸ் + அஜந்தா ↓ ஜனோசிகன்


தயாளினி (அமரர்)

சுகந்தினி + ரமணதாஸ் ↓ அபிநயா (இலண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓம் சக்தியே! பராசக்தியே!
ஓம் சக்தியே! ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே! மருவூர் அரசியே!
ஓம் சக்தியே! ஓம் விநாயகா!
ஓம் சக்தியே! ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே! பங்காரு காமாட்சியே!

மதி கலர்ஸ் பிரிண்டர்ஸ் நல்லூர். 0777-222524
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org